

# ஸஜ்தாக்கள்

ஸஜ்தா என்ற பதத்தின் கருத்து சிரம் பணிதல் என்பதாகும். சிரசை நிலத்தில் வைத்து தனது முழுமையான கீழ்ப்படிதலை அல்லாஹ்வுக்கு வெளிப்படுத்தும் செயலையே இது குறிக்கும். இதன்போது மனிதன் அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமாக இருக்கின்றான். தொழுகையில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான செயலாக ஸஜ்தா அமைந்துள்ளது. இதன் சிறப்புக்கள் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

''அடியான் அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமாக இருக்கும் சந்தர்ப்பம் ஸுஜூத் ஆகும். எனவே, அதில் அதிகமாகப் பிரார்த்தியுங்கள்.''

''நீங்கள் அல்லாஹ்வுக்காக அதிகம் ஸுஜூத் செய்யுங்கள். ஏனெனில், நீங்கள் செய்யும் ஒரு ஸஜ்தா மூலம் அல்லாஹ் உங்களது அந்தஸ்தை உயர்த்துகின்றான். உங்களது பாவத்தை மன்னித்து விடுகின்றான்.''

பர்ளான தொழுகைகளிலும் சரி ஸுன்னத்தான தொழுகைகளிலும் சரி நாம் நிறைவேற்றும் ஸஜ்தாக்கள் கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய பர்ழான வகையைச் சார்ந்த ஸஜ்தாக்களாகும். தொழுகை அல்லாத சந்தர்ப்பங்களிலும் ஸஜ்தாக்கள் நிறை வேற்றப்படுகின்றன. அவை ஸுன்னத் ஆனவையாகும். அவை **ஸஜ்தா திலாவத், ஸஜ்தா ஸஹ்வு, ஸஜ்தா ஷுக்ர்** முதலானவையாகும். ஸஜ்தா திலாவத், ஸஜ்தா ஸஹ்வு ஆகிய இவ்விரண்டு ஸஜ்தாக்களும் வுழூவுடனேயே நிறைவேற்றப்படல் அவசியமாகும்.

## ஸஜ்தா திலாவத்

அல் குர்ஆனில் மொத்தம் 15 இடங்களில் ஸஜ்தாவுடைய ஆயத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றை ஓதுபவர் அல்லது ஓதுவதைச் செவிமடுப்பவர் ஸஜ்தா செய்வது ஸுன்னத்தான ஓர் இபாதத் ஆகும். இதனையே ஸஜ்தா திலாவத் என்கிறோம். உதாரணமாக ஸூரதுல் ஹஜ்ஜில் 77ஆவது வசனம் இவ்வாறு அமைந்துள்ளது.

***‘‘நம்பிக்கையாளர்களே நீங்கள் குனிந்து சிரம் பணிந்து ஸுஜூத் செய்து உங்கள் இறைவனை வணங்குங்கள். (22: 77)***

இதன் சிறப்பு பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

‘‘ஒரு மனிதன் ஸஜ்தாவுடைய ஆயத்தை ஓதி ஸுஜூத் செய்தால் ‘எனக்குக் கேடே! ஸுஜூத் செய்யுமாறு மனிதனுக்குக் கட்டளையிடப்பட்ட போது அவன் ஸுஜூத் செய்து சுவர்க்கத்துக்குரியவனாகி விட்டான். ஸுஜூத் செய்யுமாறு நான் ஏவப்பட்டு ஸுஜூத் செய்ய மறுத்தேன். இதனால் நரகத்துக்குரியவனாகி விட்டேன்’ என்று ஷைத்தான் அழுதவாறு அங்கிருந்து செல்வான்’’ (முஸ்லிம்)

தொழுகையில் ஸஜ்தாவுடைய ஆயத்தை ஓதினாலும் ஸஜ்தா செய்வது ஸுன்னத் ஆகும். ஜமாஅத் தொழுகையில் இமாம் ஓதினால், இமாமுடன் மஃமூம்களும் ஸஜ்தா செய்ய வேண்டும். ஸஜ்தா திலாவத் செய்கிறேன் என்று மனதால் நினைத்துக் கொண்டு தக்பீர் சொல்லி ஸுஜூதுக்குச் செல்ல வேண்டும். ஒரு ஸுஜூத் செய்துவிட்டு தக்பீர் சொல்லி மீண்டும் நிலைக்கு வர வேண்டும். மீதியுள்ள ஆயத்துக்களை ஓதிவிட்டு வழமை போல தொழுகையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

தொழுகை அல்லாத வேளைகளில் ஸஜ்தாவுடைய ஆயத்தை ஓதினால் அல்லது செவிமடுத்தால் அல்லாஹ்வுக்காக ஸஜ்தா செய்கிறேன் என எண்ணிக் கொண்டு ஒரு ஸஜ்தா செய்ய வேண்டும்.

ஸஜ்தா திலாவத்தின்போது அதற்கென ஓதும் விஷேட துஆவை ஓதிக் கொள்ளலாம். வேறு பல துஆக்களும் காணப்படுகின்றன.

## ஸஜ்தா ஸஹ்வு

இதன் கருத்து மறதிக்கான ஸுஜூத் என்பதாகும். தொழுகையில் ஏதேனும் ஒரு செயலைத் தவறாக அதிகமாக செய்ததற்காகவோ அல்லது ஏதேனும் ஒன்று மறதியாக விடுபட்டதற்காகவோ அல்லது ஏதேனும் ஒரு செயல் குறித்து சந்தேகம் தோன்றினாலோ அதற்காக நிறைவேற்றப்படும் இரண்டு ஸுஜூத்களையே இது குறிக்கின்றது. பின்வரும் நிலைமைகளை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

*1. அப்ஆளு ஸுன்னத்துக்களில் ஒன்றை நினைவுடனோ மறதியாகவோ விட்டுவிடல் (உதாரணம் - முதலாம் அத்தஹிய்யாத் விடுபடல்)*

*2. தொழுகையை முறிக்கக் கூடிய ஒரு செயலை மறதியாக செய்தல் (உதாரணம் - நான்கு ரக்அத் தொழுகையை ஐந்து ரக்அத்தாக தொழுதல், தொழுகையில் கதைத்தல்)*

*3. தொழுகையில் சந்தேகம் ஏற்படுதல் (உதாரணம் தொழுகையின் போது எத்தனை ரக்அத் தொழுதேன் என சந்தேகித்தல் - இவ்வாறு சந்தேகம் ஏற்பட்டால் குறைந்த எண்ணிக்கையைச் செய்திருப்பதாகக் கருதி தொழுகையை நிறைவேற்ற வேண்டும். பின்னர் அத்தஹிய்யாத் ஓதிய பின் ஸலாம் கொடுக்க முன்பு ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும்.*

## ஸஜ்தா ஷுக்ர்

இதனை நன்றி பாராட்டும் ஸஜ்தா எனக் குறிப்பிடலாம். இதுவும் ஸுன்னத்தான ஒரு செயலாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மகிழ்ச்சி கரமான செய்தி கிடைத்தால் அல்லது ஏதாவது ஒரு காரியம் இலகுவாக அமைந்து விட்டால் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு ஒரு ஸுஜூத் செய்வார்கள். எனவே, எமக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி கிடைத்தால், ஏதாவது விடயம் எமக்கு இலகுவாக அமைந்தால் அல்லது ஆபத்தொன்றிலிருந்து நாம் பாதுகாப்புப் பெற்றால் ஸஜ்தா ஷுக்ர் செய்வது ஒரு நற்செயலாகும்.

ஸஜ்தா ஷுக்ர் செய்கிறேன் என்ற நிய்யத்துடன் தக்பீர் சொல்லி ஒரு ஸுஜூத் செய்ய வேண்டும். ஸஜ்தாவுக்குரிய உறுப்புக்கள் ஏழும் நிலத்தைத் தொடும் விதமாக ஸஜ்தா செய்ய வேண்டும்.

***ஸஜ்தாக்களின் வகைகள் பற்றி விரிவாக அறிந்து கொண்ட நாம் அவற்றை நமது வாழ்வில் கடைப்பிடித்துத் நடப்போமாக!***



### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

سُجُوْدٌ     سَجَدَةُ تِلَاوَةٍ     سَجَدَةُ شُكْرٍ     سَجَدَةُ سَهْوٍ

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**சரி, பிழை கூறுக.**

1. (அ) அல் குர்ஆனில் 36 இடங்களில் ஸஜ்தாவுடைய வசனங்கள் இடம் பெற்றுள்ளன. ( )

   (ஆ) எவ்வகையான ஸஜ்தாக்களையும் நிறைவேற்ற கட்டாயம் வுழூ செய்ய வேண்டும். ( )

   (இ) அடியான் அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமாக இருப்பது ஸுஜூதில் ஆகும். ( )

   (ஈ) பரீட்சையில் சித்தியடைந்ததற்காக நிறைவேற்ற வேண்டியது ஸஜ்தா ஸஹ்வு ஆகும். ( )

   (உ) வெள்ளிக்கிழமை ஸுப்ஹுத் தொழுகையில் இரண்டாம் ரக்அத்தில் ஸஜ்தா செய்வது கட்டாயக் கடமையாகும். ( )

2. ஸஜ்தா என்பதன் கருத்து யாது?
3. திலாவத் என்றால் என்ன?
4. ஸஜ்தாவின் சிறப்பு பற்றி ஹதீஸின் போதனைகள் மூன்றைத் தருக.
5. உமது வாழ்வில் ஸஜ்தா ஷுக்ர் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் ஐந்தைப் பட்டியற்படுத்துக.
6. ஸஜ்தா ஸஹ்வினை நிறைவேற்றும் முறையை விளக்கி நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.